செ.வெ.எண் 980 நாள் 16-12-09

செய்தி வெளியீடு– 16.12.2009

# பெருமழையால் பாதிக்கப்பட்ட நீலகிரி மாவட்டத்தில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள பல்வேறு துறைகளுக்கும் மேலும் 25 கோடி ரூபாய் அனுமதி !

## முதலமைச்சர் கலைஞர் ஆணை !

நீலகிரி மாவட்டத்தில் அண்மையில் பெய்த பெருமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவுகளால் பாதிப்படைந்த பகுதிகளில் உரிய நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அளித்த அறிவுரைகளின் அடிப்படையில், அமைச்சர் பெருமக்கள் நீலகிரி மாவட்டம் சென்று அங்கு மழை வெள்ளத்தால் நிலச்சரிவு ஏற்பட்ட இடங்களைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறியதுடன் அவர்களுக்குரிய நிவாரண உதவிகளை உடனுக்குடன் வழங்கிடவும் ஆவன செய்தனர். பாதிக்கப்பட்ட சாலைப் போக்குவரத்துகளும் தொடர்ந்து சீரமைக்கப்பட்டன.

அவற்றைத் தொடர்ந்து, நீலகிரி மாவட்டத்தில் சேதமடைந்த நெடுஞ்சாலைகளைச் சீரமைப்பதற்காகவும், மின்சார அமைப்புகளைச் செப்பனிடுவதற்காகவும், தோட்டக்கலைத் துறை, நகர பஞ்சாயத்துத் துறை, குன்னூர் நகராட்சி, உதகமண்டலம் நகராட்சி, ஊரக வளர்ச்சித்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித்துறை ஆகியவற்றின்மூலம் பல்வேறு சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காகவும் பேரிடர் நிவாரண நிதியில் இருந்து மேலும் 25 கோடி ரூபாய் அனுமதித்து முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

* * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9